19.08.2016

# தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

**பிரண்டை சீசன்**

மழை அவ்வப்போது பெய்தவுடன் தான் வயல்களில் மகிழிக் கீரையும், மலைக்காடுகளில் பிரண்டையும் வளரும். பிரண்டையில் ஆண் பிரண்டை, பெண் பிரண்டை என வகைகள் உள்ளன. இது தவிர அதன் வடிவத்தால் ஓலைப் பிரண்டை, உருட்டுப் பிரண்டை, முப்பிரண்டை,களிப்பிரண்டை என வகைகள் உள்ளன. வச்சிரம் என்றால் வடமொழியில் வைரம். வைரம் போன்று நரம்புகளுக்கு உறுதியைத் தருவதால் பிரண்டைக்கு வச்சிரவல்லி, சஞ்சீவி போன்ற பெயர்கள் உள்ளன. நரம்புத்தளர்ச்சியை போக்கும் பிரண்டை ஆண்மையைப் பெருக்குகிறது. உணவியல் மண்டலம் தொடர்பான பிரச்னைகளைத் தீர்க்கப் பயன்படுகிறது.

## இயற்கை உரத்தில் காய்கறி தோட்டம்: பவானிசாகர் டவுன் பஞ்சாயத்து அசத்தல்

பவானிசாகர்: பவானிசாகர் டவுன் பஞ்சாயத்து அலுவலக வளாகத்தில், இயற்கை உரங்கள் மூலமாக, காய்கறிகளை விளைவித்து அதிகாரிகள் அசத்துகின்றனர்.

பவானிசாகர் டவுன் பஞ்சாயத்து அலுவலக வளாகத்தில், இரண்டு ஏக்கரில் உரப்பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள, 15 வார்டுகளில் சேகரமாகும் மக்கும் குப்பை, இங்கு குவிக்கப்பட்டு, இயற்கை உரமாக மாற்றப்படுகிறது. பூங்காவின் ஒரு பகுதியில், ஒரு ஏக்கரில் காய்கறி தோட்டம் அமைந்துள்ளது. இதில், இயற்கை உரத்தைக் கொண்டு, வெண்டை, புடலை, வெள்ளரி, சின்ன வெங்காயம், மரவள்ளி மற்றும் மாதுளை ஆகிய பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. இத்தோட்டத்து காய்கறிகளை வாங்க பெண்கள் அதிக

ஆர்வம் காட்டுகின்றனர். இதுகுறித்து, செயல் அலுவலர் சுப்ரமணியம் கூறியதாவது: திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த உரப்பூங்காவில், இயற்கை உரத்தை பயன்படுத்தி, காய்கறிச் செடிகளை வளர்க்கிறோம். இதனால், மிகுந்த சுவையுடன், உடலுக்கு கூடுதல் ஆரோக்கியம் தரும் காய்கறிகள் கிடைக்கின்றன. மேலும், இயற்கை உரம் தேவைப்படுவோர், அலுவலகத்தை அணுகி பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

**மீன் வளர்க்க மானியம்**

திண்டுக்கல், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஒரு எக்டேர் நிலத்தில் ரூ.5 லட்சம் செலவில் மீன் வளர்ப்பு குளங்கள் அமைப்போருக்கு மானியம் வழங்கப்படும். அதிகபட்சமாக ஒரு எக்டேருக்கு ரூ. 2 லட்சம் மற்றும் மீன்குஞ்சுகள் வாங்க ரூ.10 ஆயிரம் வழங்கப்படும்.விருப்பமுள்ளோர் விண்ணப்பிக்கலாம். இவர்கள் சொந்த நிலம் அல்லது 10 ஆண்டு குத்தகைக்கு நிலம் வைத்திருக்க வேண்டும். விண்ணப்பங்களை, 'மீன்வள உதவி இயக்குனர் அலுவலகம், 12ஏ, ஸ்பென்சர் காம்பவுண்ட், திண்டுக்கல்--1' என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். 0451--242 7148ல் தொடர்பு கொள்ளலாம் என, கலெக்டர் வினய் தெரிவித்துள்ளார்.

## உச்சத்தை தொட்டது ஏலக்காய் விலை 5 ஆண்டுக்குப்பின் கிலோ ரூ. ஆயிரம்

கம்பம், ஏலக்காய் விலை உச்சத்தை தொட்டுள்ளது. 2011 க்கு பிறகு தற்போது சராசரி விலை கிலோவிற்கு ரூ. ஆயிரத்தை தாண்டியது. எனினும் காய் வரத்து குறைவாக இருப்பதால் விலை கிடைத்தும் பலன் இல்லை என்று விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

இந்தியாவில் ஏலக்காய் சாகுபடி கேரள மாநிலத்தில் மட்டும் அதிக பரப்பில் மேற்கொள்ளப்படுகிறது. இடுக்கி மாவட்டத்தில் 1.5 லட்சம் ஏக்கர் பரப்பில் ஏலத்தோட்டங்கள் உள்ளன.

ஏலக்காயை பொறுத்தவரை விலை கிடைப்பதும், விளைச்சல் நல்ல நிலையில் இருப்பதும் கேள்விக்குறியாக இருந்து வருகிறது. இதில் ஏதாவது ஒன்று பாதிக்கப்படுகிறது.

பாதிப்பு

கடந்த கோடையில் நல்ல வெயில் அடித்ததும், மழை இல்லாததும், மகசூல் பாதிப்பிற்கு காரணமாக உள்ளது. தற்போது செடிகளில் காய் மிகவும் குறைவாக உள்ளது. எனவே மார்க்கெட்டிற்கு புதிய காய் வரத்து இல்லை. கிலோவிற்கு ரூ. 600 என சராசரி விலை இருந்தது படிப்படியாக உயர்ந்து நேற்று முன்தினம் சராசரி விலை கிலோவிற்கு ரூ. ஆயிரத்து 13 என்று அதிகரித்தது. இந்த விலை உயர்வு விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை தந்த போதும், காய் இல்லாததால் கவலையில் உள்ளனர்.

ஏலவிவசாயிகள் கூறுகையில், 'ஏலக்காய் விலை கடந்த 2011 க்கு பிறகு கிலோவிற்கு ரூ. ஆயிரத்திற்கு மேல் கிடைப்பது இப்போது தான். இந்த விலை உயர்வால் பெரிய அளவில் பயன் இல்லை. இனி செப்டம்பர் இறுதியில் தான் காய் கிடைக்கும். அதுவரை இந்த விலை தொடருமா என்பது தெரியவில்லை,' என்கின்றனர்.

**தேனி வாழைக்காய் விலை கேரளாவில் சரிந்தது**

தேவாரம், கேரளாவிற்கு திருநெல்வேலி, கன்னியாகுமரி பகுதிகளில் இருந்து அதிக வரத்திருப்பதால், தேனி மாவட்ட வாழைக்காய் விலை அங்கு சரிந்துள்ளது. தேனி மாவட்டத்தில் 15 ஆயிரம் ஏக்கரில் திசு வாழை சாகுபடி நடக்கிறது. இங்கிருந்து மத்திய கேரளா பகுதிக்கும் மதுரை, திருச்சி, சென்னை, பெங்களூரு உள்ளிட்ட மாநகரங்களுக்கும் வாழைக்காய் அனுப்பப்படுகிறது. கடந்த மாதம் நல்ல கிராக்கி இருந்ததால் கிலோ ரூ.18 வரை தோட்டத்திற்கு வந்து மொத்த வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். பின்னர் கேரளாவில் ரூ.32க்கு விற்பனை செய்தனர்.

தற்போது விலை சரிந்து தோட்டத்தில் கிலோ ரூ.14க்கு வாங்கப் படுகிறது. கூடலூர் மொத்த வியாபாரி செல்லப்பாண்டியன் கூறுகையில், “திருநெல்வேலி, கன்னியாகுமரியிலிருந்து செங்கோட்டை வழியாக மத்திய கேரள பகுதிக்கு வாழைக்காய் கொண்டு வரப்படுகிறது. இந்த ரக வாழைக்காய் கிலோ ரூ.25க்கு

அங்கு விற்கப்படுவதால், தேனி மாவட்ட வாழைக்காயும் ரூ.7 குறைத்து கிலோ ரூ.25க்கு விற்கப்படுகிறது. அதே நேரம் இங்கிருந்து குறைந்த வாடகையில் வாகனத்தில் வாழைக்காய் கேரளா கொண்டு செல்லப்படுவதால் லாபம் கிடைக்கிறது," என்றார்.

## விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனத் திட்டம்

ராமநாதபுரம்,:ஆதி திராவிட விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்தில் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்து தரப்படுகிறது.ஐந்து ஏக்கர் விவசாய நிலம் உள்ள ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்திலும், அதற்கு மேல் நிலம் உள்ளவர்களுக்கு 75 சதவீதம் மானியத்திலும் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கும் திட்டம் தோட்டக்கலைத் துறையால் செயல்படுத்தப்படுகிறது.தோட்டக்கலை பயிர்களான வாழை, காய்கறிகள், மலர்கள், மிளகாய் பயிர்கள், வேளாண்மை பயிர்களான தென்னை, கரும்பு, பருத்தி, மக்காச்சோளம் போன்ற பயிர்களுக்கும் சொட்டுநீர்ப்பாசனம் அமைக்கலாம். ஆதிதிராவிட விவசாயிகள் பயனடையும் வகையில் 2015ம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டின் கீழ் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க பணி உத்தரவு வழங்குவதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. எனவே, கணினி பட்டா, அடங்கல், ரேஷன் கார்டு, நில வரைபடம் நகல்களுடன் புகைப்படத்தை இணைத்து அந்தந்த வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் மற்றும் வட்டார வேளாண்மை உதவி இயக்குனரிடம் வழங்கி பயனடையலாம், என ராமநாதபுரம் மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் தமிழ் வேந்தன் தெரிவித்து உள்ளார்.

## தோட்டக்கலை கருத்தரங்கு

காளையார்கோவில்,: காளையார்கோவில் தோட்டக்கலை துறை சார்பில் மாவட்ட அளவிலான உயர் தொழில் நுட்ப கருத்தரங்கு கலெக்டர் மலர்விழி தலைமையில் நடைபெற்றது. தோட்டக்கலை துணை இயக்குநர் ராஜேந்திரன், மதுரை வேளாண்மைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் ஆனந்தன், குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் செந்தூர் குமரன்,விபிஸ் தேன் வளர்ப்பு பயிற்சி நிறுவன தலைவர் ஜோஸ்பின், முன்னோடி விவசாயிகள்

மகேஷ், ஆபிரகாம், வேளாண்மை துறை உதவி இயக்குநர் மோகன்தாஸ் சவுமியான்,கோட்டக்கலை உகவி இயக்குநர்கள் கல்யாணசுந்தரம், கரோலின் சேவியர் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### நதிநீர் இணைப்புப் பணி விரைவில் தொடங்கும்



அனைத்து மாநிலங்களின் ஒத்துழைப்புடன் நதிநீர் இணைப்புப் பணிகள் விரைவில் தொடங்கும் என மத்திய அமைச்சர் சதானந்த கவுடா தெரிவித்தார்.

விருதுநகர், சுலோக்சனா தெருவில் உள்ள காமராஜர் இல்லத்தில் அவரது உருவ சிலைக்கு வியாழக்கிழமை புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறை அமைச்சர்

சதானந்த கவுடா, பாஜக தமிழக தலைவர் தமிழிசை சவுந்தர்ராஜன் மற்றும் மாநிலச் செயலர் சீனிவாசன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அதன் பின்னர் மத்திய அமைச்சர் சதானந்த கவுடா செய்தியாளர்களிடம் கூறியதாவது: நாடு முழுவதும் சுதந்திரப் போராட்ட தியாகிகளை போற்றி நினைவு கூறும் வகையில் மூத்த தலைவர்கள் சுற்றுப்பயணம் செய்து வருகிறோம். அதன்படி, வியாழக்கிழமை காலை சிவகங்கை வேலுநாச்சியார் மணி மண்டபம், திருப்பத்தூர் மருது சகோதரர்கள் நினைவிடம் சென்று நான் பார்வையிட்டேன். அதே போல், தற்போது காமராஜர் பிறந்த வீட்டுக்கு வந்திருப்பது எனக்கு புதிய உத்வேகத்தை அளித்துள்ளது. நாட்டில் நதிநீர் இணைப்பு முன்னாள் பிரதமர் வாஜ்பாயால் கொண்டு வரப்பட்டது. தற்போது குஜராத், மத்திய பிரதேசம் போன்ற மாநிலங் களில் நதிநீர் இணைப்புக்கான முதற்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், அனைத்து மாநில அரசுகளின் ஒத்துழைப்புடன் நதிநீர் இணைப்பு பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்றார்.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

காவிரியின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் பெய்துவரும் மழையின் காரணமாக, மேட்டூர் அணைக்கு புதன்கிழமை காலை நொடிக்கு 3,977 கன அடியாக வந்து கொண்டிருந்த நீர்வரத்து, வியாழக்கிழமை காலை நொடிக்கு 4,264 கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 500 கன அடி வீதமும் கிழக்கு, மேற்கு கால்வாயில் நொடிக்கு 500 கன அடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

அணையின் நீர்மட்டம் 64.09 அடியாக இருந்தது. அணையின் நீர் இருப்பு 27.82 டி.எம்.சி.

**சம்பா பருவத்துக்கான நெல் ரகங்களை விவசாயிகள் பெற்றுக் கொள்ளலாம்: வேளாண் அதிகாரி தகவல்**

தடப்பள்ளி - அரக்கன்கோட்டை, காலிங்கராயன் பகுதி பாசன விவசாயிகள் சம்பா பருவத்துக்கான நெல் ரகங்களைப் போதுமான அளவுக்கு வேளாண் விரிவாக்க மையங்களில் பெற்றுக் கொள்ளலாம் என ஈரோடு மாவட்ட வேளாண் இணை இயக்குநர் சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வியாழக்கிழமை வெளியிட்ட செய்தி:

ஈரோடு மாவட்டத்தில் தடப்பள்ளி - அரக்கன்கோட்டை, காலிங்கராயன் பாசன பகுதிகளில் ஆகஸ்ட் 12-ஆம் தேதி முதல் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இந்த கால்வாய்களால் பாசன வசதி பெறும் டி.என்.பாளையம், கோபி, ஈரோடு, மொடக்குறிச்சி, கொடுமுடி வட்டாரங்களில் சம்பா பருவத்துக்கேற்ற நெல் ரகங்களான சிஓ50, சிஓ(ஆர்)48, சிஓ(ஆர்)49, ஏடிடி-38, ஏடிடி-39, ஏடிடி(ஆர்)-49, சிஓ-43 பவானி, மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி போன்றவைகளும், பின் சம்பா பருவத்துக்கான வெள்ளை பொன்னி ரகங்களான ஏடிடி-38, ஏடிடி-39, ஏடிடி(ஆர்)-46, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக நெல் வீரிய ஒட்டு ரகங்களான சிஓ-50, ஏடிடி(ஆர்)-49, சிஓ-50 ஆகியவை உகந்த ரகங்களாக வேளாண் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளன.

மேற்கண்ட நெல் ரகங்களில் சிஓ-50, ஏடிடி(ஆர்)-49, ஏடிடி-38, ஏடிடி-39 போன்ற நெல் ரகங்கள் அனைத்து வட்டார வேளாண் விரிவாக்க மையங்களிலும் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இத்துடன் பருவத்துக்கு உகந்த விளைச்சல் தரும் என்எல்ஆர்-34449 நெல் ரகமும் இருப்பில் உள்ளது. உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியம், உயிரியல் பூச்சிக்கொல்லிகளான சூடோமோனஸ், ட்ரைகோடெர்மா போன்றவையும் போதுமான அளவு இருப்பு உள்ளது.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நடவு செய்ய ஹெக்டேருக்கு மானியமாக ரூ. 5,000 வழங்கப்படுகிறது. அனைத்து நெல் வயல்களிலும் வரப்புப் பயிராக பயறு வகைகளான உளுந்து, பாசிப்பயறு, தட்டை ஆகியவற்றை சாகுபடி செய்யலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## பரமத்தி வேலூர் ஏல மையத்தில் கொப்பரைத் தேங்காயின் விலை உயர்வு

பரமக்தி வேலார் சேலம் ஒழுங்குமுறை விற்பனை கூடக்கில் வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் கொப்பரைத் தேங்காய் அதிக விலைக்கு ஏலம் போனது. சோழசிராமணி, ஜேடர்பாளையம்,அய்யம்பாளையம், பிலிக்கல்பாளையம், கபிலர்மலை, பாண்டமங்கலம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து வெங்கமேட்டில் உள்ள சேலம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்குக் கொப்பரைத் தேங்காயை விவசாயிகள் கொண்டு வருகின்றனர்.

இம்மையக்கில் கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் 4,484 கிலோ கொப்பரைத் தேங்காய் கொண்டு வரப்பட்டிருந்தன.

இதில் அதிகபட்சமாக கிலோ ஒன்று ரூ.55.15-க்கும், குறைந்தபட்சமாக கிலோ ஒன்று ரூ.53.20-க்கும் ஏலம் போனது.

நிகம்வாரம் வியாழக்கிழமை நடைபெற்ற ஏலக்துக்கு 4,471 கிலோ கொப்பரைக் தேங்காய் கொண்டு வரப்பட்டிருந்தது. இதில் அதிகபட்சமாக கிலோ ஒன்று ரூ.60.10-க்கும், குறைந்தபட்சம் கிலோ ஒன்று ரூ.56.10-க்கும், சராசரியாக கிலோ ஒன்று ரூ.58.45-க்கும் ஏலம் போனது.

கொப்பரைக் தேங்காயின் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## அரசு மானியத்துடன் மீன் வளர்க்க வாய்ப்பு

மீன் வளர்ப்பு குளங்கள் அமைக்க அரசு மானியமாக ரூ.2.10 லட்சம் வழங்கப்படும் என மீன் வளத் துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மீன் வளத் துறை சார்பில் அண்மையில் வெளியிட்ட செய்தி: 2016-17-ஆம் ஆண்டு தேசிய வேளாண் அபிவிருத்தி கிட்டக்கின் கீழ், ஹெக்டேரில் ரூ.5 லட்சம் செலவில் சொந்த நிலத்தில் மீன் வளர்ப்பு குளங்கள் அமைப்பவர்களுக்கு அதிகபட்சமாக ஹெக்டேருக்கு ரூ.2 லட்சம், மீன் குஞ்சுகள் வாங்குவதற்கு ரூ.10 ஆயிரம் என மொத்தம் ரூ.2.10 லட்சம் மானியமாக வழங்கப்படும். எனவே, மீன் வளர்ப்பு குளங்கள் அமைக்க விரும்புபவர்களிடமிருந்து இகற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மீன் வளர்ப்பு குளங்கள் அமைக்க

பயனாளி சொந்த நிலம் அல்லது 10 ஆண்டு குத்தகைக்கு பெற்ற நிலம் வைத்திருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் அதிகம் வரும் பட்சத்தில் முன்னுரிமை, தகுதியின் அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர். விருப்பமுள்ளவர்கள் மீன் வள ஆய்வாளர் அலுவலகங்கள் பாம்பாறு அணை, பாரூர், கிருஷ்ணகிரி, மீன் வள சார்-ஆய்வாளர் அலுவலகம் ஒசூர், மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம் கிருஷ்ணகிரி ஆகிய மீன் துறை அலுவலகங்களை நேரில் தொடர்பு கொண்டு, உரிய விண்ணப்பப் படிவம் பெற்று பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் சமர்ப்பித்து பயனடையலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இயற்கை முறையில் சாகுபடி செய்யும் கீரை வகைகளுக்கு அமோக வரவேற்பு

போச்சம்பள்ளி அருகே இயற்கை முறையில் சாகுபடி செய்யும் கீரை வகைகளுக்கு இப்பகுதி மக்களிடம் அமோக வரவேற்பு பெற்றுள்ளது.

போச்சம்பள்ளி அருகேயுள்ள கோணனூர் பகுதியைச் சேர்ந்தவர் யுவராஜ். வேளாண் பட்டயப் படிப்பு முடித்துள்ள இவர், தனது நிலத்தில் இயற்கை உரங்களைக் கொண்டு கீரை வகைகளை சாகுபடி செய்து வருகிறார். இதுகுறித்து அவர் கூறியது: முதல்கட்டமாக முப்பது வகையான கீரைகளை சாகுபடி செய்து பசுமைப் பூங்கா எனும் பெயரில் சந்தைப்படுத்தி வருகிறேன். கீரை வகைகளில் பருப்புக் கீரை, வெங்காயக் கீரை, அரைக் கீரை, பாலக் கீரை, கக்கான் கீரை, பசலைக் கீரை உள்ளிட்ட அரிய வகை கீரைகளை இயற்கை முறையில் சாகுபடி செய்வது மட்டுமல்லாமல், ரசாயன உரங்களை பயன்படுத்தாமல் பழரசங்களை உரமாக இட்டு சாகுபடி செய்து வருகிறேன். இவ்வாறு தயாரிக்கப்படும் கீரை வகைகளை உண்பதால், மனித உடலுக்கு தேவையான அனைத்து சத்துக்களும், வைட்டமின்களும் கிடைக்கின்றன. இது நோய்களுக்கு சிறந்த மருந்தாகவும், நோய் எதிப்புச் சக்தியாகவும் உள்ளது.

மேலும், நாம் உண்ணும் உணவில் தினமும் இயற்கை முறையில் சாகுபடி செய்யும் கீரைகளை சேர்த்துக் கொண்டால், உடலில் எவ்வித நோயின்றி ஆரோக்கியமான வாழ்க்கையை வாழலாம். தற்போது ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவற்றை பயன்படுத்தி விவசாயம் செய்வதன் மூலம் மண்வளம்

மாசுபடுவதுடன், மனிதர்களுக்கும் நாளுக்கு நாள் பல்வேறு வகையான நோய்கள் பெருகி வரும் சூழ்நிலையை ஏற்படுகிறது.

எனவே, பாரம்பரிய முறையைக் கடைப்பிடித்து பஞ்சகாவியா, அமினோ அமிலம், ஜீவாமிர்தம் பழக்கரைசல், அமுதக்கரைசல், மண்புழு உரம், ஆகிய இயற்கை வளர்ச்சி ஊக்கிகளைப் பயன்படுத்தி கீரை வகைகளை சாகுபடி செய்வதோடு, நெல், கரும்பு, வாழை ஆகியவற்றையும் இயற்கை உரம் கொண்டு விவசாயம் செய்யலாம் என்றார்.

**நாகையில் நாளை விவசாயக் கண்காட்சி**

நாகப்பட்டினத்தில் சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பில், பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்ட விழிப்புணர்வு முகாம் மற்றும் விவசாயக் கண்காட்சி சனிக்கிழமை (ஆக. 20) நடைபெற உள்ளது என அதன் திட்ட ஒருங்கிணைப்பாளர் அ. அனுராதா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பில் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்ட விழிப்புணர்வு முகாம் மற்றும் விவசாயக் கண்காட்சி ஆக. 20 ஆம் தேதி காலை 9 மணியளவில் நாகை மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியை தமிழ்நாடு கைத்தறி மற்றும் ஜவுளித்துறை அமைச்சர் ஓ.எஸ். மணியன் தொடங்கி வைக்கிறார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இயக்குநர்கள், வேளாண்மைத் துறை மற்றும் வேளாண்மை சார்ந்த துறைகளின் அதிகாரிகள், அலுவலர்கள் பங்கேற்க உள்ளனர். பல்வேறு நிறுவனங்களின் கருத்துக் காட்சி அரங்குகளும், செயல் விளக்கங்களும் நடைபெற உள்ளது. கண்காட்சியில் நாகை மாவட்ட விவசாயிகள் பங்கேற்று பயனடைய வேண்டும் என அவர் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மீன் வளர்ப்பு குளம் அமைக்க □2.10 லட்சம் மானியம்

விழுப்புரம், :விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் லட்சுமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:2016-17ம் ஆண்டிற்கு தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் ஒரு ஹெக்டேரில் ரூ.5 லட்சம் செலவில் சொந்த நிலத்தில் மீன்வளர்ப்பு குளங்கள் அமைப்பவர்களுக்கு அதிகபட்சமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ.2 லட்சமும் மற்றும் மீன்குஞ்சுகள் வாங்க ரூ.10 ஆயிரம் என மொத்தம் ரூ.2.10 லட்சம் மானியமாக வழங்கப்படும். இந்த திட்டத்தில் பயனடைய விரும்புபவர்கள் விண்ணப்பிக்கலாம்.மீன்வளர்ப்பு குளங்கள் அமைக்க பயனாளி சொந்த குளங்கள் அல்லது குறைந்தபட்சம் 10 வருடங்கள் குத்தகை நிலங்கள் பெற்றுவைத்திருக்க வேண்டும். விவசாயிகளிடமிருந்து அதிகளவு விண்ணப்பங்கள் வந்தால் தகுதி மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள். விழுப்புரம் மாவட்டத்தில் விருப்பமுள்ள மீன்வளர்ப்பு விவசாயிகள் விழுப்புரம் மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகமான விழுப்புரம் வழுதரெட்டி, நித்யானந்தா நகரில் உள்ள அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### விவசாயிகளுக்கு வேளாண் தொழில்நுட்ப பயிற்சி

வானூர், :வானூர் தாலுகா கிளியனூரில் விவசாயிகளுக்கு கிராம அளவிலான பயிற்சி நடத்தப்பட்டது. இதில் திண்டிவனம் உழவர் பயிற்சி நிலையம் சார்பாக அதிகாரிகள் கலந்துகொண்டு பயிற்சி அளித்தனர்.விதை நேர்த்தி, நுண்ணுயிர் விதை நேர்த்தி, நெல் பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்து பயிர்களில் கடைபிடிக்க வேண்டிய சாகுபடி தொழில்நுட்பங்கள், ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை ஆகியவை குறித்து வேளாண் அலுவலர் சரவணன் பயிற்சி அளித்தார்.

இயந்திர நெல் நடவு ஹெக்ேடருக்கு ரூ.5 ஆயிரம் மானியம் மற்றும் பசுந்தாள் சாகுபடிக்கு ஹெக்ேடருக்கு ரூ.1500 மானியம் உள்ளிட்ட திட்டங்கள் குறித்து பயிற்சியின்போது எடுத்துக்கூறப்பட்டது.ஆத்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் நரசிம்மராஜ் பார்த்தீனியம் அழிப்பு முறைகள் பற்றியும் அவைகளால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் எடுத்துரைத்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர் வீரமணி, உதவி வேளாண்மை அலுவலர் கலைச்செல்வி ஆகியோர் உடன் இருந்தனர்.

## கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.27 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

நாமக்கல் : நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் ரூ.27 லட்சத்துக்கு பருத்தி ஏலம் நடைபெற்றது. நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று பருத்தி ஏலம் நடைபெற்றது. சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த 300 விவசாயிகள் மொத்தம் 1,500 மூட்டை பருத்தியை ஏலத்துக்கு கொண்டு வந்திருந்தனர். சேலம், ஈரோடு, கரூர் உள்ளிட்ட பல்வேறு ஊர்களை சேர்ந்த வியாபாரிகள் ஏலம் கேட்க வந்திருந்தனர். ஆர்சிஎச் ரக பருத்தி ஒரு குவிண்டால் ரூ.5,697 முதல், ரூ.6,155 வரையும், சுரபி ரக பருத்தி ஒரு குவிண்டால் □5,546 முதல், ரூ.6,339 வரையும் ஏலம் போனது. ஒட்டுமொத்தமாக ரூ.27 லட்சத்துக்கு பருத்தி ஏலம் நடைபெற்றது. சங்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

## முதல் போக நெல் சாகுபடிக்கு கிருஷ்ணகிரி அணையில் நீர் திறப்பு 9012 ஏக்கர் பாசன வசதி பெறும்

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி அணையில் இருந்து முதல்போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் 9012 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். கிருஷ்ணகிரி அணையில் இருந்து முதல்போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிட தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார். இதையடுத்து நேற்று மதியம் 2 மணியளவில், முதல் போக நெல் சாகுபடிக்கு, கலெக்டர் கதிரவன் தண்ணீரை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அசோக்குமார் எம்பி, முன்னாள் எம்எல்ஏ, கோவிந்தராஜ், கிருஷ்ணகிரி நகராட்சி தலைவர் தங்கமுத்து, காவேரிப்பட்டணம் ஒன்றிய செயலாளர் ஜமுனா கிருஷ்ணன், ஆவின் பெருந்தலைவர் தென்னரசு, தர்மபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர்

கேசவன், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் சாம்ராஜ், கிருஷ்ணகிரி ஒன்றிய குழு துணைத் தலைவர் சோக்காடி ராஜன் மற்றும் பாசன விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

கிருஷ்ணகிரி அணையின் மொத்த உயரமான 52 அடியில், தற்போது 51.15 அடி தண்ணீர் உள்ளது. இடது மற்றும் வலது புற பிரதான கால்வாய்களில் முதல்போக பாசனத்திற்காக திறந்து விடப்பட்டுள்ள தண்ணீரால் பெரியமுத்தூர், சுண்டேகுப்பம், திம்மாபுரம், சவுட்டஅள்ளி, தளிஅள்ளி, கால்வேஅள்ளி, குண்டலப்பட்டி, மிட்டஅள்ளி, எர்ரஅள்ளி, பெண்ணேஸ்வரமடம், காவேரிப்பட்டணம், பாலேகுளி, மாரிசெட்டிஅள்ளி, நாகோஜனஅள்ளி, ஜனப்பரஅள்ளி, பையூர் ஆகிய 16 பஞ்சாயத்துகளில் பல்வேறு கிராமங்களை சேர்ந்த 9012 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். வருகிற 2017ம் ஆண்டு ஜனவரி மாதம் 13ம் தேதி வரை 150 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படும். அணையில் தற்போது உள்ள நீர் அளவை கொண்டும், பருவமழையால் வரும் நீர் வரத்தை எதிர்நோக்கியும் இடதுபுற கால்வாய் மூலம் வினாடிக்கு 75 கன அடி தண்ணீரும், வலதுபுற கால்வாய் மூலம் 75 கன அடி தண்ணீரும் என மொத்தம் 150 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

## நீலகிரியில் கடன் திட்டம் வெளியீடு விவசாயத்திற்கு ரூ.1555 கோடி ஒதுக்கீடு

ஊட்டி, : ஊட்டியில் உள்ள மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் முன்னோடி வங்கி சார்பில் வங்கிகளுக்கான மாதாந்திர கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் சங்கர் நடப்பு நிதியாண்டிற்கான வருடாந்திர கடன் திட்ட அறிக்கையை வெளியிட்டார். முதல் பிரதியை ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் முருகேசன் பெற்று கொண்டார். இந்த கடன் திட்ட அறிக்கையின்படி நீலகிரி மாவட்டத்தில் 2016-17ம் ஆண்டிற்கு விவசாயத்திற்கு என ரூ.1555 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சிறு, குறு தொழில் கடனாக ரூ.345 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை காட்டிலும் 23 கோடி அதிகம். இதர கடன்களுக்கு ரூ.270 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.இதன்படி நீலகிரி

மாவட்டத்தின் மொத்த கடன் திட்டம் ரூ.2170 கோடி ஆகும். மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் அறிவழகன், சென்னை ாிசர்வ் வங்கி உதவி பொது மேலாளர் சரவணன், கோவை நபார்டு வங்கி துணை மேலாளர் செல்வன், கனரா வங்கி முதன்மை மேலாளர் நாராயணன் நாயக் மற்றும் வங்கி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**மஞ்சள் விலை உயர்வு**

கோவை, : கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று மாலை நடந்த மஞ்சள் ஏலத்தில் விரலி ரகம் 160 குவின்டாலும், கிழங்கு ரகம் 40 குவின்டாலும் என மொத்தம் 200 குவின்டால் விற்பனையானது. இதை கோவை, பொள்ளாச்சி, விருதுநகர் பகுதியை சேர்ந்த வியாபாரிகள் கொள்முதல் செய்தனர்.

விலை விரலி மஞ்சள் குவின்டால் ரூ8,200 முதல் ரூ.9,900 வரை விற்றது. இதன் சராசரி விலை ரூ.8,600. விற்பனை மதிப்பு ரூ.13.76 லட்சம். கிழங்கு மஞ்சள் குவின்டால் ரூ.7,800 முதல் ரூ.8,249 வரை விற்றது. இதன் சராசரி விலை ரூ.8,000. விற்பனை மதிப்பு ரூ.3.20 லட்சம். இரண்டு ரகமும் சேர்ந்து ரூ.16.96 லட்சத்திற்கு விற்றது.

இதுகுறித்து ஒழுங்குமுறை விற்பனைக்கூட அதிகாரிகள் கூறுகையில், ‘ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஈரோடு, பெருந்துறை, கோபி ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் விற்பனையில் மஞ்சள் ஒரு குவின்டால் அதிகபட்ச விலை ரூ.8,900ம் ஆக இருந்தது. இதனுடன் ஒப்பிடுகையில் கோவையில் நேற்று நடந்த ஏலத்தில் ஆயிரம் ரூபாய் அதிகரித்து, ரூ.9,900க்கு விற்றுள்ளது என்றனர்.

**தொலைபேசி மூலம் தகவல் பெற விவசாயிகளுக்கான கருத்தரங்கம்**

கரூர் : தொலைபேசி மூலம் தகவல் பெறுவது தொடர்பான கருத்தரங்கம் உழவர்சந்தை விவசாயிகளுக்கு நடைபெற்றது. கரூர் உழவர் சந்தையில் விவசாயிகளுக்கான கருத்தரங்கம் நடைபெற்றது. கிசான் சுவிதா செயலிபதிவிறக்கம் மற்றும் பயன்பாடுகள் பற்றி விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

உதவி நிர்வாக அலுவலர் திருமூர்த்தி, வரவேற்றார். வேளாண்மை துணை இயக்குனர் (வேளாண் வணிகம்) ராஜேந்திரன் தலைமை வகித்தார். நிர்வாக அலுவலர் அனிதா கருத்துரை வழங்கினார். பொன்முருகன் நன்றி கூறினார். கிசான் கால்சென்டர் மூலம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் மழைஅளவு, பருவநிலை மாற்றங்கள், விவசாயிகளின் விளைபொருட்களின் தினசரி சந்தை விலை நிலவரம், பயிர்பாதுகாப்பு முறை மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படும். விவசாயிகள் தொலைபேசி எண்ணை செயலி மூலம் பதிவிறக்கம் செய்து பயன்பெறலாம். உழவர்சந்தை விவசாயிகள் 80க்கும் மேற்பட்டவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

## தோட்டக்கலை துறையில் சொட்டு நீர் பாசனம் அமைக்க சிறப்பு முகாம் விவசாயிகளுக்கு அழைப்பு

அரியலூர் : தோட்டக்கலை துறையில் சொட்டு நீர் பாசனம் அமைப்பது குறித்து அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு சிறப்பு முகாம் நடத்தப்படுகிறது. எனவே இந்த முகாமில் விவசாயிகள் கலந்து கொண்டு விவரங்களை பதிவு செய்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து கலெக்டர் சரவணவேல்ராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

அரியலூர் மாவட்டத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையில் 2016-17 ம் ஆண்டின் தேசிய நீடித்த நிலையான வேளாண் இயக்கத்தில் சொட்டுநீர் பாசனம் அமைக்கப்படுவதற்கு விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதன்படி சொட்டுநீர்ப்பாசன திட்டத்தின் மூலம் சிறு, குறு விவசாயிகளுக்கு அவர்தம் நிலங்களில் சொட்டுநீர் பாசனம் அமைக்க 100 சதவிகித மானியமும், இதர விவசாயிகளுக்கு 75% மானியத்தில் 12.5 ஏக்கர் வரை வழங்கப்படுகிறது.

தோட்டக்கலைத்துறை மூலம் சொட்டு நீர்ப்பாசன திட்டம் செயல்படுத்த தோட்டக்கலை பயிர்களுக்கு 578 எக்ேடர் பொருள் இலக்கும், ரூ.398 லட்சங்கள் நிதி இலக்கும், வேளாண் பயிர்களுக்கு 193 எக்ேடர் பொருள் இலக்கும், ரூ.132 லட்சங்கள் நிதி இலக்கும் பெறப்பட்டுள்ளன. மேலும் சொட்டுநீர்ப்பாசன திட்டத்தை விவசாயிகளின் மத்தியில் விரைவாக கொண்டு செல்லும் பொருட்டு

அரியலூர் மாவட்டத்தில் அரியலூர், திருமானூர், தா.பழூர், செந்துறை, ஜெயங்கொண்டம், ஆண்டிமடம் ஆகிய இடங்களில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களில் 23.08.2016 வரை சொட்டுநீர் பாசன திட்டம் தேவைப்படும் விவசாயிகளின் விவரங்களை சேகரிக்கும் சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது. எனவே சொட்டுநீர் பாசன அமைப்பு தேவைப்படும் விவசாயிகள் தங்கள் நிலத்தின் கணினிசிட்டா, அடங்கல், நில வரைபடம், குடும்ப அட்டை நகல், சிறு, குறு விவசாயி சான்று, 2 புகைப்படத்துடன் கலந்து கொள்ளலாம். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## மாதூரில் 5 நாள் நடந்த நன்னீர் மீன் வளர்ப்பு பயிற்சி முகாம் நிறைவு

காரைக்கால்: காரைக்கால் மாதூர் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் நடைபெற்று வந்த 5 நாள் நன்னீர் மீன் வளர்ப்பு பயிற்சி முகாம் நிறைவுபெற்றது. மாதூர் வேளாண் அறிவியல் நிலையமும், தேசிய மீன்வளர்ப்பு அபிவிருத்தி வாரியமும் இணைந்து நடத்திய, நன்னீர் மீன்வளர்ப்பு பயிற்சி முகாம் நேற்று முன்தினம் நிறைவு பெற்றது. நிறைவு நாள் நிகழ்ச்சியில், அண்ணாமலை பல்கலைக்கழக கடல்வாழ் உயிரின மைய பேராசிரியர் கலைசெல்வன், மீன் மற்றும் இறால்கள் வளர்ப்பின்போது ஏற்படும் நோய் தாக்குதல், அதிலிருந்து மீன் மற்றும் இறால்களை காக்கும் முறை, மீன் பண்ணை, மீன் உணவு சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட விளக்கங்களை செய்முறையுடன் விளக்கினார்.

தொடர்ந்து, நிலையத்தின் மீன்வள தொழில்நுட்ப வல்லுநர் விஜயகுமார், மீன் விவசாயிகளுடன் கலந்துரையாடல் நடத்தி, அவர்களின் பல்வேறு கேள்விகளுக்கு பதில் அளித்தார். பின்னர், பயிற்சிமுடித்த அனைவருக்கும் சான்றிதழ் மற்றும் மீன் வளர்ப்பு கையேட்டை வழங்கினார். நிகழ்ச்சியில், கால்நடை தொழில்நுட்ப வல்லுநர் டாக்டர் கோபு, உதவி தொழில்நுட்ப வல்லுநர் லதா, பண்ணை மேலாளர் ஆண்டனிதாஸ், மீன்வள உதவி ஆய்வாளர் முருகேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## கால்நடை பாதுகாப்பு திட்டம்

அலங்காநல்லூர், : அலங்காநல்லூர் அருகே அழகாபுரியில் திருமங்கலம் கோட்டத்தின் சார்பில் சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்டம் நடைபெற்றது. முகாமில் குடல்புழு நீக்கம், செயற்கை முறை கருவூட்டல், மலடுநீக்க பரிசோதனை, தடுப்பூசி, தீவன பயிர் சாகுபடி உள்ளிட்டவை குறித்து கால்நடை வளர்ப்பவர்களுக்கு செயல்விளக்க பயிற்சிகள் தரப்பட்டது. தொடர்ந்து சிறந்த கலப்பின கன்றுகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. அலங்காநல்லூர் வட்டார மருந்தக உதவி மருத்துவர் மெரில்ராஜ் தலைமையிலான மருத்துவ குழுவினர் சிகிச்சை அளித்தனர்.

## வேளாண் காப்பீட்டு திட்ட புத்தூட்ட பயிற்சி

தேனி, : தேனியில் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையின் சார்பில் பொதுப்பயிர் மதிப்பீட்டாய்வு மற்றும் தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம் குறித்து வருவாய்த்துறை, புள்ளியியல் துறை, வேளாண்மை, தோட்டக்கலைத் துறைகள், நிலஅளவைத் துறை ஆகிய துறை அலுவலர்களுக்கான புத்தூட்ட பயிற்சி நேற்று தேனியில் நடந்தது.கலெக்டர் வெங்கடாசலம் தலைமை வகித்தார். புள்ளியில் துறை துணை இயக்குநர் அப்துல்ரஹீம், வேளாண்மைத் துறை மாநிலத் திட்ட துணை இயக்குநர் சங்கரன் முன்னிலை வகித்தனர். உதவி இயக்குநர் கந்தராஜன் வரவேற்றார்.

பயிற்சி முகாமில் கலெக்டர் வெங்கடாசலம் பேசும்போது, பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப மாவட்டத்தில் பயிரிடும் பயிர்களின் மொத்த சாகுபடி பரப்பு உற்பத்தி, தானியங்கள், உற்பத்தி ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் உணவு தேவையையும் கண்காணித்திடவும், தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பயிருக்கு எவ்வளவுகாப்பீட வழங்க வேண்டும் என்பதை கண்காணித்து பயிர்களுக்கு காப்பீடு வழங்கிட வேண்டும். வருவாய்த் துறை அலுவலர்கள் நிலம் சம்பந்தப்பட்ட புல எண் மற்றும் பயிர்சாகுபடி பரப்பு கண்டறியப்பட தேர்வு செய்ய வேண்டும் என்றார்.